# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 19.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# விவசாயிகளின் வாழ்க்கையில் விளையாடாதே மட்டக்களப்பில் வீதியில் இறங்கிய விவசாயிகள்









(ரக்ஸனா, துசி, துதிமோகன்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பசளையின்றி சிரமங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் மட்டக்களப்பில் உள்ள இராஜாங்க அமைச்சரும்,மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் மௌனமாகயிருப்பதாகவும் தங்களுக்கான பசளையினைப் பெற்றுக்கொள்ள அனைவரும் நடவடிக்கையெடுக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

## இனத்தின் விடுதலைக்காய் போராடியவர்கள் இன்று பசளைக்காக போராடுகின்றனர்



(ரக்ஸனா)

இனத்தின் விடுதலைக்காய் போராடிய இனத்தை இன்று பசளைக்காகவும் போராடும் நிலைக்கு இந்த அரசும் அரசுடன் இணைந்துள்ளவர்களும் சேர்ந்து தள்ளியுள்ளார்கள். இது விவசாயிகளின் பிரச்சனை மாத்திரமல்ல, சோறு சாப்பிடும் அனைவரினதும் பிரச்சனை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வெல்லாவெளியில் இடம் பெற்ற விவசாயிகளின்

02 ஆம் பக்கத்தில்...

## களைகோள்ளிக்கு சிறுநீரையா பாவிப்பது?



(துதிமோகன்)

சேதனப் பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது. அப்படியாயின் களைகொள்ளிக்கு சிறுநீரையா பாவிப்பது? சேதனப் பசளை மூலம் விவசாயிகளுக்கு ஏற்படப் போகும் நஷ்டத்திற்கு நட்டஈடு

02 ஆம் பக்கத்தில்...

## பாடசாலைகள் மீண்டும் 21 ஆம் திகதி ஆரம்பம்

### 52,536 மாணவர்கள் பாடசாலைக்கு வரவுள்ளனர்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாணத்தில் 568 பாடசாலைகள் மிண்டும் திறப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் கிழக்கு மாகாண பணிப்பாளர் என்.புள்ளைநாயகம் இணைந்து நடாத்திய கலந்துரையாடலில் பிரத்தியேகமாக செயற்பாடுகள் தொடர்பான விடங்கள் ஆராயப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...



## 21 ஆம் திகதி பணிக்குச் செல்லுங்கள்: இ.தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

அனைத்து அதிபர்களும், ஆசிரியர்களும் வரும் 21ஆம் திகதி பணிக்குச் சென்று கடமையில் ஈடுபட வேண்டுமெனவும் இது யாருக்கும் எதிரான செயற்பாடு அல்லவெனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## கோத்தாவின் கோள்கைப்பிரகடனம் மக்களுக்கு போருத்தமானதாக இல்லை

### மாற்று கோள்கையை அமுல்படுத்துங்கள்: கலையரசன் எம்.பி

(நூருல் ஹுதா உமர், சகா )

அரசாங்கம் விவசாயிகளின் விருப்பு வெறுப்புக்களை ஓரம் தள்ளிவிட்டு இந்த துறையில் பாண்டித்தியம் பெற்ற அதிகாரிகளின் ஆலோசனைகளையெல்லாம் கவனத்தில் கொள்ளாது செயற்படுகிறது. இயற்கை பசளைகளை வழங்கி விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்று தனது கொள்கை பிரகடனத்தில் ஜனாதிபதி உறுதி கொண்டுள்ளார். இந்த விடயமானது விவசாயத்தை

02 ஆம் பக்கத்தில்...



## 2013 முதல் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு

### சர்வதேச மன்னிப்பு சபை கவலை

AMNESTY INTERNATIONAL

2013 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் முஸ்லிம் சமூகம் தொடர்ச்சியான பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் வன்முறை சம்பவங்களை அனுபவித்து வருவதாக சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இது சிறுபான்மை குழுவை வெளிப்படையாக குறிவைக்கும்

03 ஆம் பக்கத்தில்...

## வீடு புகுந்து அட்டகாசம் செய்து குடும்பஸ்தர் ஒருவரை கோலை அச்சுறுத்தல் விடுத்த ஒன்பது பேர் கைது

( எச்.எம்.எம்.பர்ஸான்)

கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதநகர் பகுதி வீடொன்றில் அத்துமீறி உட்புகுந்து அங்கு அட்டகாசம் செய்த ஒன்பது பேரை கைது செய்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்பது பேர் கொண்ட குழுவினர் குறித்த பகுதி வீடொன்றுக்குள் உட்புகுந்து அட்டகாசம் செய்ததுடன் அங்கிருந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு

02 ஆம் பக்கத்தில்...









## வாக்களித்த சிங்கள மக்களே அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப தயாராகிவிட்டார்கள்

(யாழ்கீதன்)

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வாக்களித்த சிங்கள மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் எதிர்கட்சியாகிய நாங்கள் உள்ளோமென முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

03 ஆம் பக்கத்தில்...






## 21 ஆம் திகதி பணிக்குச் செல்லுங்கள்; இ.தமிழர் ஆசிரியர் சங்கம்

அவர் மேலும் தெரிவிக்கையில் வரும் 21ஆந் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. ஒரு சில அதிபர், ஆசிரிய தொழிற்சங்கங்கள் தொடர் போராட்டத்தில் உள்ளன. இதன் மூலம் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முற்றாக தடைப்பட்டுள்ளன. ஆனால் பிரத்தியேகமாக பல ஆசிரியர்கள் பணம் பெற்று கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

முதலில் போராட்டம் தொடங்கியது சம்பள உயர்ச்சிக்காக அல்ல. கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு எதிராக தனி ஒரு மனிதனாக ஒரு ஆசிரிய தொழிற் சங்கத்தின் செயலாளர் தொடக்கிய போராட்டம். இவ்விடயம் தொடர்பில் அவரது சங்கத்தினருக்கே அது தெரியாது.

அவரை தனிமைப் படுத்தலுக்கு கொண்டு சென்று விடுவிக்கப்பட்ட பின்னரே சம்பள முரண்பாடு தொடர்பான விடயம் பேசப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பாக எவரும் எம்முடன் பேசவும் இல்லை. கலந்துரையாடவும் இல்லை.

நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கும் போது இலங்கையில் உள்ள அனைத்துச் சங்கங்களுடனும் பேச வேண்டும். இரண்டு அரசியல் கட்சி சார்ந்த சங்கங்கள் தமது அரசியல் நலனுக்காக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தமை இப்போது வெளிப்படுகின்றது.

இதைவிட இந்தப் போராட்டம் முன்னெடுத்த காலம் தவறானது. உலகில் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டு மரணங்கள் தொடராக நடைபெறும் நேரத்தில் இதனை முன்னெடுக்க முடியாது. சம்பள அதிகரிப்பு அல்லது முரண்பாடு தீர்த்தல் தொடர்பாக முன்னைய ஆட்சிக்காலத்தில் ஏன் வாய்திறக்கவில்லை. ஏன் இதுபோன்ற போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. இப்போராட்டம் தொடர்பில் கல்வித்துறை சார்ந்த புத்திஜீவிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், என பலரும் அதிருப்தி வெளியிட்டனர். இப்போது ஊடகங்களே வெளிப்படையாக மாணவர் நலன்சார்ந்து அதிபர்கள், ஆசிரியர்களை தொழிற்சங்கங்களை விமர்சிக்கத் தொடங்கிவிட்டகாரணம் நாற்பது ஆண்டுகால யுத்தத் சூழ்நிலையில் நாம் ஒருபோதும் கற்பித்தல் செயற்பாடுகளை இடைநிறுத்தியது கிடையாது. போரட்டம் நடைபெற்றபோது பதுங்குகுழிகளுக்குள்ளே எமது ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளை மேற்கொண்டனர். பிள்ளைகளின் கல்வியை பணயம் வைப்பது தெய்வகுற்றமாகும்.

இப்போதும் கற்பித்தல் பணியை இடைநிறுத்தியது தவறானது என்றுதான் நாம் சொல்கின்றோம். இவ்விடயம் தொடர்பில் பெற்றோர் மத்தியில் கடும் அதிருப்தி நிலை உருவாகியுள்ளது. தற்போது சமூக மட்டத்திலும் பலவிதமான கருத்துக்கள் உருவாகியுள்ளன.

ஒரு தனி மனிதனின் அரசியல் சூழ்ச்சியால் பல லட்சம் மாணவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளதாக பேசுகின்றனர். இதை விட ஒன்றரை ஆண்டுகள் கற்பித்தல் பணியில்லாமல் 70 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்திபெற்று உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர். பெருமளவான மாணவர்கள் பிரத்தியேக கல்வியை நாடினர் என்பதும், அதிபர், ஆசிரியர்களின் பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளை எவ்வாறு பெற்றனர் என்ற கேள்விகளும் சமூக மட்டத்தில் எழுந்துள்ளன. இலவசமாக சேவை செய்த ஆசிரியர்கள் இன்று பணம் வாங்கி கல்வி வழங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எமது இனம் சார்ந்த குழந்தைகள் ஏற்கனவே பலவற்றை இழந்துள்ளனர். அவர்கள் இன்னும் பின்னிலைக்குச் செல்ல நாம் காரணமாக இருக்க மாட்டோம். ஆகையால் பாடசாலைகள் ஆரம்பமானதும் எமது அதிபர், ஆசிரியர்கள் முழுமையாக பணி செய்வார்கள் என்றார்.

## வீடு புகுந்து அட்டகாசம் செய்து குடும்பஸ்தர்

கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இக் குழுவினர் தொடர்ச்சியாக போதை அருந்திவிட்டு அப்பகுதி மக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதாகவும், அமைதிக்கும், சமாதானத்துக்கும் பங்கம் விளைவித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட ஒன்பது பேரையும் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பாடசாலைகள் மீண்டும் 21 ஆம் திகதி

பாதுகாப்பான முறையில் பாடசாலைகள் நாடுதழுவிய அளவில் ஆரம்பிப்பது தொடர்பாக விசேட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கு அமைவாக ஆரம்பிப்பது தெரடர்பாக தொற்றுநோயியல் நிபுணர் தர்சினி குறிப்பிடுகையில் பாடசாலைகளில் கண்டிப்பாக பாவித்த முககவசங்களை பாதுகாப்பான முறையில் அகற்றுவது சமூக இடைவெளி கைகளை கழுவிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் பாடசாலை வகுப்பறை சுத்தம் செய்தல் வகுப்பறைகளில் காற்றோட்டத்தினை உறுதிப்படுத்தல் மாணவர்களின் உடல் வெப்பநிலையினை பரிசோதித்தல் ஒய்வறைகளில் அதிகமானவர்கள் இருப்பதை தவிர்பது மாணவர்களுக்கான நோயாளர் அறை ஒன்றையும் அயத்தம் செய்வது போன்ற சுகாதார விதிகள் எடுத்துக் கூறப்பட்டது.

மாகாண பணிப்பாளர் என்புள்ளைநாயகம் குறிப்பிடுகையில் பாடசாலை வகுப்பறைகளை கவர்சியாக்குவது வெளிச்சூழலை சுத்தப்படுத்துவது மற்றும் 200 மாணவர்களை கொண்ட பாடசாலைகளை ஆரம்பித்தல்.

பாடவிதானங்களை உடனடியாக ஆரம்பிக்காது மெதுவாக ஒருநாளைக்கு மூன்று பாடங்கள் என்ற அடிப்படையிலும் மாணவர்களை விளையாட்டு மற்றும் சித்திரம் கட்டுரை கவிதைகள் போன்ற செயல்பாடுகளில் கூடியளவு நேரத்தினை செலவிடவைப்பது போன்றவற்றில் மாணவர்களின் ஈடுபாடுகளை அதிகதிப்பது உளவியல் சார் பாடவிதானம் ஒன்றும் நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றதாகவும் அதனை மாணவர்களுக்கு விரைவில் அறிமுகமாகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மாணவர்களை தங்களின் விடுகளில் இருந்து தக்களுக்கான நீர் உணவுகளை கொண்டுவரும்படியும் இலவச உணவுகளை தற்போது வழங்கப்படமாட்டாது எனவும் யுனிசெப் நிறுவத்தின் உதவிமுலம் பையில் அடைக்கப்பட்ட பால் உணவு வழங்வுள்ளதாகவும் பாடசாலைகளில் அறிவுறுத்தல்களை உடணடியாக காட்சிப்படுத்தும் படியும் பெற்ரோர்ளுக்கான விழிப்புனர்களையும் வளங்குமாறு குப்பிடப்பட்டது இக்கூட்டத்திற்கு வலையகல்வி பணிப்பாளர்கள் மற்றும் உள்ளுராட்சிகளின் தலைவர்கள் சுகாதார பிரிவினர்களும் கலந்துகொண்டனர்

## களைகொள்ளிக்கு சிறுநீரையா பாவிப்பது?

வழங்கும் முன்மொழிவையும் எதிர்வரும் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இணைத்துக் கொள்ளுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இன்றைய தினம் வெல்லாவெளியில் இடம்பெற்ற விவசாயிகளின் பிரச்சனைகளுக்கான தீர்வு கோரிய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு விவசாயிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இதன் முக்கிய காரணம் என்னவென்றால். சேதனப் பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது. உலகத்திலே எந்த நாட்டிலும் சேதனப் பசளையை முழுமையாகப் பாவித்து பயன்பெற்ற நாடு என்று எதுவும் இல்லை. சவால் விடுகின்றேன், எந்த நாட்டில் சேதனப் பசளை முழுமையாகப் பாவித்து விளைச்சலை அதிகரித்திருக்கின்றார்கள் என்று முடியுமானால் கூறட்டும்.

கடந்த வருடம் நேபாளத்தில் முழுமையாகச் சேதனப் பசளை பாவிக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும் கூட மக்களின் எழுச்சி காரணமாகவும், ஆய்வுகளின் காரணமாகவும் 2035ம் ஆண்டு வரை அதடினைப் பிற்போட்டிருக்கின்றார்கள். ஆனால் நம் நாட்டில் சேதனப் பசளை மாயையைக் கூறிக்கொண்டு எங்கள் விவசாயிகளை நஷ்டத்திற்குள் தள்ளும் செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே தற்போது பெரும்போகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் விளைச்சல் குறையுமாக இருந்தால் விவசாய அமைச்சரும், அரசாங்கமும் பதில் கூற வேண்டும். இதற்கான நட்டஈடுகளை தற்போதே நீங்கள் தயாராக வைத்துக் கௌ;ளுங்கள். ஏனெனில் சேதனப் பசளை பவித்து ஒரு ஏக்கருக்கு நாலில் ஒரு பங்கு விளைச்சலையே பெற முடியும்.

சேதனப் பசளை விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் ஒரு திட்டமிடல் இல்லாமல் திடீரென செய்யச் சொன்னால் விவசாயிகள் என்ன செய்ய முடியும். இன்று இலங்கையில் பல இடங்களில் யூரியா பசளை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். அது யாருக்கு விற்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே படிப்படியாக இதனை மாற்ற வேண்டுமே தவிர திடீரென இராணுவ நடவடிக்கை மூலம் செயற்படுத்துங்கள் என்று சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த விடயத்தைக் கண்டித்தே இன்று விவசாயிகளின் ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது. இன்றைய போராட்டங்கள் முடிவுற்றாலும் எமது பாராளுமன்ற உறுப்பினர்களினால் பாராளுமன்றம் வரை குரல்கொடுக்கப்டும்.

பசளை விடயத்தில் சேதனம் அசேதனம் என்ற சொல்லுகின்றீர்கள். ஆனால், களைகொள்ளிக்கு என்ன செய்வது சிறுநீரையா நாங்கள் பாவிப்பது? களைகொள்ளியைப் பாவித்து இருக்கும் களைகளை அழித்தால் தான் விவசாயிகளிடமிருந்து விளைச்சலைப் பெற முடியும். அதற்கும் சேதன நாசினியா?, இராசாயண நாசினியா? என்பது தெரியாமல் இருக்கின்றது.

இவ்வாறு பூரண விளக்கம் இல்லாமல் விவசாயிகள் தீண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். விவசாயிகளுக்கான தகுந்த தீர்வு தேவை. எனவே எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டத்தில் சேதனப் பசளை மூலம் விவசாயிகளுக்கு ஏற்படப் போகும் நஷ்டத்திற்கு நட்டஈடு வழங்கும் முன்மொழிவையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்.

## கோத்தாவின் கொள்கைப்பிரகடனம்

முற்றுமுழுதாக நாசமாக்கும் விடயமாக பார்க்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சவளக்கடை பிரதேசத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற விவசாயிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கொண்டு பேசும் போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

மொத்த தேசிய உற்பத்தியில் 22 சதவீத பங்களிப்பை செய்யும் எங்களின் பிரதேசத்தில் சேதனைபசளை மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கும். கடந்த காலங்களில் எமது பிரதேச விவசாயிகள் பல்வேறு சிக்கல்களை சந்தித்தார்கள். பல்வேறு நஷ்டங்களை அடைந்திருந்தாலும் சிறப்பாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுபீட்சத்தின் நோக்குத்திட்டத்தை முன்மொழிந்து மக்களை வறுமையின் பால் இந்த அரசாங்கத்தின் கொண்டு செல்கிறார்கள். வரத்திற்கு ஒரு அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். விவசாயம் அடங்களாக எல்லா பொருட்களின் விலையும் கடுமையாக எறியுள்ளது. இதனை ஏற்க மக்கள் தயாரில்லை என்பதால் நாடு முழுவதிலும் போராட்டங்கள் நடக்கிறது. கோத்தாவின் கொள்கைப்பிரகடனம் மக்களுக்கு பொருத்தமானதாக இல்லை. எனவே மாற்று கொள்கையை அமுல்படுத்த முன்வரவேண்டும்.அரசுக்குள்ளும் பல்வேறு கருத்து முரண்பாடுகள் வந்துள்ளது.

விலைவாசியை கட்டுப்படுத்தி நாட்டு மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்க வேண்டும் என்பதுடன் இரசாயன பசளையை இறக்குமதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கொண்டனர்.

## விவசாயிகளின் வாழ்க்கையில் விளையாடாதே

பசளை விடயம் தொடர்பில் அவர்களின் தற்காலப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி உரம் இன்றி உழவு இல்லை என்ற மகுடத்தில் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று திங்கட்கிழமை கண்டன ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, ஆயித்தியமலை, வந்தாறுமூலை,கிரான் ஆகிய பகுதிகளில் உள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ப.அரியநேந்திரன், ஞா.ஸ்ரீநேசன், கி.துரைராஜசிங்கம், மாநகரமேயர் சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் விவசாயிகளும் பங்கேற்றனர்.

உரமின்றி உழவர் நிலம் இல்லை உடனே உரத்தைத் தா, விவசாயிகளின் வாழ்க்கையில் விளையாடாதே அரசே, சேதனைப் பசளை பிரவேசத்தால் விளைச்சல் குறைந்தால் நட்டஈடு தருவாயா அரசே?, முடக்காதே முடக்காதே எமது விவசாயத்தினை முடக்காதே,அழிக்காதே அழிக்காதே எமது பொருளாதாரத்தினை அழிக்காதே,திடீர் சேதனம் விவசாயத்தினை முடக்கும் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயத்திற்கு சேதனைப்பசளை முக்கியம்தான் என்றாலும் அதனை உடனடியாக செய்யமுடியாது என தெரிவித்த விவசாயிகள் படிப்படியாகவே அவற்றினை செய்யமுடியும் எனவும் ஆனால் அரசாங்கம் முழுமையாக பசளையினை முடக்கியதானது விவசாயிகளை கடுமையாக பாதித்துள்ளதாகவும் விவசாயிகள் இதன் போது கவலை தெரிவித்தனர்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சேதனப் பசளை இந்த மண்ணுக்கு பொருத்தமானது என கூறியுள்ளார்.அவர் எங்காவது இரண்டு ஏக்கர் காணியைப்பெற்று சேதனப்பசளை மூலம் ஒரு ஏக்கருக்கு 40 மூடை அறுவடையினைப் பெறுவாரானால் நான் இந்த அரசியலிலிருந்து ஒதுங்குவேன் என வெல்லாவெளி பிரதேச சபை உறுப்பினர் தியாகராஜா இந்த ஆர்ப்பாட்டத்தின்போது சவால் விடுத்தார்.

காலை 8.00 மணி தொடங்கிய ஆர்ப்பாட்டம் பகல் 12.30 மணி வரை நீடித்தது.




## இனத்தின் விடுதலைக்காய் போராடிவர்கள்

பிரச்சனைகளுக்கான தீர்வு கோரிய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றைய தினம் கடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று தரை வழிப் போராட்டமாக மாறியிருக்கின்றது.

எங்களது இனத்தின் விடுதலைக்காகப் போராடிய இனம் இன்று வாழ்வாதாரத்திற்காகப் போராடும் நிலைமைக்கு இந்த அரசு தள்ளிருக்கின்றது.

நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் சம்மந்தப்பட்ட சில பிரச்சனைகளை அமைச்சரும், அரசாங்கமும் கவனத்தில் எடுக்காத காரணத்தினால் கடல்வழிப் போராட்டம் நடாத்தப்பட்டது.

இன்று இரண்டாவது நாளாகத் தரைவழிப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது வடக்கு கிழக்கிலே அதனது இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

போராட்டம் என்பது அறிந்து வருவது. அதற்கு எவரையும் அழைக்க வேண்டிய அவசியமில்லை. இது மக்களுக்காக, விவசாயிகளுக்காகச் செய்யும் போராட்டம்.

ஆனாலும். நாங்கள் மண்வெட்டியை வைத்திருப்பது தான் விமர்சனப் பொருளாக இருக்கும். எம்மை விமர்சிப்பது பரவாயில்;லை. இவ்வாறாகவாவது எமது போராட்டம் இந்த அரசுக்குப் போய்ச் சேர வேண்டும்.

எங்களுடைய வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் மீன்பிடியையும், விவசாயத்தையும் நம்பி வாழும் மக்களே அதிகம். அதிலும் இன்றைய தினம் நாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் வெல்லாவெளிப் பிரதேசம் தொன்னூறு வீதம் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள்தான்.

விவசாயிகளுக்கு இன்று உரம் இல்லாத நிலையில் இந்த மாவட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வாக்களித்த மக்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறாமல் தங்களது வியாபார நலன்களை மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இது மிகவும் கவலையானதொரு விடயம்.

இயற்கைப் பசளையின் மூலம் விசாயம் செய்து எமது விளைச்சல்களை அதிகரிக்கலாம் என்று குழந்தைப் பிள்ளைத் தனமாகவும், குரங்குச் சேட்டையாகவும் கருத்துக்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

இயற்கைப் பசளை பாவித்து விவசாயத்தில் அதிக விளைச்சல் பார்க்கலாம் என்று சொல்லுபவர்கள் உண்மையிலேயே விவசாயிகள் அல்ல. அவர்கள் வியாபாரிகள்.

நானும் உண்மையில் விவசாயி இல்லைதான் ஆனால் விவசாயிகள் படும் கஷ்டங்களைப் புரிந்து கொள்பவன் என்ற அடிப்படையில், மக்களோடு மக்களாக இருப்பவர்கள். தினமும் விவசாயிகள் அவர்களின் துயரங்களைச் சொல்லும் போது மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்ட யூரியா இன்று பத்தாயிரம் வரை அதிகரித்திருக்கின்றது. இவ்வாறு அதிகமான விலைக்குப் பசளை வாங்கும்போது நெல் விலை அதிகரிக்கும் அதன்மூலம் அரிசி விலை அதிகரிக்கும். எனவே இது வெறுமனே விவசாயிகளின் பிரச்சனை அல்ல. சோறு சாப்பிடும் அனைவரினதும் பிரச்சனை.

இது விவசாயிகளுக்கான போராட்டமே தவிர இதில் நாங்கள் அரசியல் இலாபம் தேடவில்லை. அரசோடு இருப்பவர்களுக்கும் இப்போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா அண்ணன் வெளிநாடு சென்றமையால் அவரால் வர முடியவில்லை. ஆனால் மற்றைய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏன் வரவில்லை. ஏன்? விவசாய மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லையா? விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லையா? இது அரசியற் கட்சி சார்ந்த ஒரு போராட்டம் அல்ல. இது மக்களின் போராட்டம் அரசாங்கத்துடன் இருக்கின்றீர்கள் என்பதற்காக மக்களுக்காகப் போராடாமல் இருக்க முடியாது.

கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று சொல்லுபவர்கள் உங்கள் மாவட்டத்தில் உங்களுக்கு வாக்களித்த மக்கள் உரமில்லாமல் கஸ்டப்படும் பொழுதும் கூட உங்கள் காரியாலங்களை மூடிக்கொண்டு குளிர் அறைகளில் இருந்து கொண்டிருப்பது மிகவும் கவலையான விடயம்.

இந்த வாரம் முழுவதும் போராட்ட வாரமாகவே இருக்கும். நேற்றைய தினம் எங்கள் மீனவர்களுக்காக, இன்றைய தினம் எங்கள் விவசாயிகளுக்காக, எதிர்வரும் நாட்களிலே காணி அபகரிப்பு, அண் அகழ்வு என்பவற்றுக்கெதிரன போராட்டங்கள் நடைபெறும்.

எனவே இனத்தின் விடுதலைக்காகப் போராடிய இனத்தை இன்று பசளைக்காகவும் போராடும் நிலைக்கு இந்த அரசும் அரசுடன் இணைந்துள்ளவர்களும் சேர்ந்து தள்ளியுள்ளார்கள் என தெரிவித்தார்.

# மத்திய மாகாணத்தில் திட்டமிட்டபடி பாடசாலைகள் திறக்கப்படும்



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

மத்திய மாகாணத்தில் 200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளையும் இம்மாதம் 21ம் திகதி திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாணக் கல்வி பணிப்பாளர் அமரசிறி பியதாச தெரிவித்தார்.

200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 805 பாடசாலைகள் திட்டமிட்டபடி திறக்கப்படும். மத்திய மாகாணத்தில் நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலுள்ள 15 கல்வி வலயங்களுக்கும்; கொவிட் 19 சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான அறிவுறுத்தல்கள் வலய கல்வி பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் மன ஆரோக்கியத்தையும் ஒருங்கிணைப்பையும் உருவாக்க பாடசாலையின் முதல் நாளில் சிறப்புத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அன்று ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பணிக்கு வர வேண்டும் என்றும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் தற்போது பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் ஊடாக பாடசாலை மற்றும் பாடசாலை சுற்றாடல் சுத்தம் செய்யப்பட்டுவருவதாகவும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூவின விவசாயிகள் ஒன்றாக திரண்டு சேருவிலவில் ஆர்ப்பாட்டம்



**(பொன்ஆனந்தம்)**

திருகோணமலை சேருவில பகுதியில் மூவின மக்களாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயிகளின் போராட்டத்தில் நகரம் சில மணி நேரம் முடங்கியது.

இதில் மூவினத்தை சேர்ந்த மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டனர். பல்வேறு கோரிக்கை அடங்கிய பதாகைகளையும் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்துடன் சேருவில அலிஒலுவ நகரில் பிரதான வீதியில் திரண்டதல் போக்குவரத்து ஸ்தம்பித்த நிலையடைந்து. இதன்போது பௌத்த துறவிகளும் கலந்து கொண்டனர்.

# உரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

விவசாயிகள் முகம் கொடுக்கின்ற உரப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என கிண்ணியா விவசாயிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று கிண்ணியா விழிப்புணர்வு தகவல் மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே விவசாய சம்மேளனங்களின் தாய் சங்க பிரதிநிதிகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

இரசாயன பசளை இறக்குமதியை முழுமையாக நிறுத்தி உடனடியாக சேதனப் பசளைக்கு செல்ல வேண்டும் என விவசாயிகளை நிர்ப்பந்திப்பது ஒரு ஆரோக்கியமற்ற செயற்பாடாகும்.

பசளைகளை தயார் படுத்துகின்ற எந்த ஒரு ஆரோக்கியமான நடவடிக்கைகளையும் உரிய வேளைக்கு எடுக்காமல் தற்போது அரசாங்கமானது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இதனால் பயிர்ச் செய்கை பண்ணப்படவேண்டிய இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நெற்செய்கை செய்யப்படாமல் கைவிடப்படுகின்ற ஆபத்தான நிலை தோன்றி இருக்கின்றது.

அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் இன்றி அரங்கேற்றப்பட்ட இந்த வேலைத்திட்டம் விவசாயிகளையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிப்பதோடு அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற நிலைமையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.



சேதன உரத்தை பயன்படுத்துவதன் மூலம் உரிய விளைச்சலை பெற முடியாது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளுகின்ற அரசாங்கமானது நட்டம் ஏற்படுகின்ற போது விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஆனால் அந்த நட்ட ஈடு எவ்வாறு வழங்கப்படும் எவ்வளவு வழங்கப்படும் என்பதை உத்தரவாதம் செய்யாமல் வாய் மூலம் மாத்திரம் அறிக்கை விட்டுக் கொண்டிருப்பது விவசாயிகளுக்கு அவ நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

எனவே இப்போகத்தில் முழு விவசாய நிலங்களிலும் நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்களை விவசாயிகள் செய்கை பண்ண வேண்டுமானால் உடனடியாக இரசாயன பசளையை இறக்குமதி செய்து விநியோகிக்க வேண்டும் அல்லது நட்ட ஈட்டுக்கான உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைப்பதாகவும் தவறும் பட்சத்தில் விவசாய நடவடிக்கைகளில் இருந்து தாங்கள் ஒதுங்கி கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் அவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கோட்டகலை பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் 14 விருப்பு வாக்குகளால் நிறைவேற்றம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

கொட்டக்கலை பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 14 விருப்பு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

தவிசாளர் ராஜமணி பிரசாந் சமர்பித்த 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை சபைக்கு சமூகமளித்த 16 உறுப்பினர்களில் 14 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 1 உறுப்பினர் எதிர்ப்பாகவும் வாக்களித்தனர். இதில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களான பி.ரவிச்சந்திரன், கே.கல்யாணகுமார், எஸ்.லெட்சுமணன், பி.நாகேந்திரன், எம்.அஞ்சலாதேவி, கே.கலாவதி ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர். மக்கள் விடுதலை முன்னணி கட்சியை சேர்ந்த எஸ்.ராஜா எதிர்ப்பாக வாக்களித்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரதேசசபையின் தலைவர் ராஜமணி பிரசாந் உட்பட உப தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆர்.கெசியோன்ராஜ், எஸ்.விஜயகுமார், பி.நேசன், ஐ.பாலசுப்ரமணியம், சந்திரவதனி மற்றும் ஶ்ரீலங்கா பொதுஜனபெரமுன கட்சியை சேர்ந்த என்.கருணரத்ன ஆகியோர் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். தவிசாளர் உட்பட 16 உறுப்பினர்கள் கொண்ட கொட்டக்கலை பிரதேசசபையில் அன்றைய தினம் 15 உறுப்பினர்கள் மாத்திரம் சபைக்கு சமூகமளித்திருந்தனர். அதில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கட்சியைச் சேர்ந்த



உறுப்பினர் பி.அருண்தினேஸ் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை. இந்த பிரதேசசபை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த % உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த 6 உறுப்பினர்களும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கட்சியை சேர்ந்த 1 உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணி கட்சியைச் சேர்ந்த 1 உறுப்பினரும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த 1 உறுப்பினருமாக மொத்தமாக 16 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகியன இணைந்து ஆட்சியமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து தலைவர் ராஜமணி பிரசாந்த் உரையாற்றுகையில்,

கடந்த ஆண்டு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஆதரவு வழங்கியது போல இந்த ஆண்டும் ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டில் நிலவிய கொரோனா பரவல் காரணமாக எமது சபையின் வேலைத் திட்டங்கள் தாமதமாகிய போதிலும் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, மக்களுக்கு கொரோனாவிலிருந்து பாதுகாப்பு வழங்கியுள்ளோம். நாம் ஏற்கனவே திட்டமிட்டபடி எமது சபைக்கு உட்பட்ட வட்டாரங்களுக்கு இன்றைய தினம் 50 ஆயிரம் முகக் கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் யார் பதவிக்கு வந்தாலும் எமது வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கொட்டகலை பிரதேச சபையின் ஊடாக வழிகாட்டி வந்துள்ளோம். 2022 ஆம் ஆண்டுக்கான சபைக்கான வரவு 14 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 900 ஆயிரம் ரூபாவாகவும், செலவினமாக 14 கோடியே 65 இலட்சத்து 19 ஆயிரத்து 506 ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. எமது சபையானது அரசியல், தொழிற்சங்க பேதத்துக்கு அப்பால் எல்லோருக்கும் பொதுவான சேவையை வழங்கி வருவதால் எந்த விதமான பேதமும் இல்லாமல் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொது மக்கள் எதிர்பார்க்கின்ற சேவையை நாம் நிச்சயம் வழங்குவோம். எமது சபையின் ஊடாக கொரோனாவை முற்றாக ஒழித்தல், சகல வட்டாரங்களுக்கும் வாசிகசாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், எல்லோருக்கும் குடிநீர் பெற்றுக் கொடுத்தல், சகல தோட்டங்களுக்கும் கொங்கிரீட் பாதைகளுக்குப் பதிலாக கார்பெட் பாதைகளை அமைத்தல் முதலான பிரதான விடயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தோட்டங்கள், நகரங்கள், கிராமங்களின் அபிவிருத்தி, மாணவர்களின் கல்வி மேம்பாடு, சுகாதார வேலைத் திட்டங்கள், விஷேட தேவை உடையோருக்கான உதவிகள், பொருளாதார சுபீட்சம், கைத்தொழில், விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தல், சிறந்த சபையாக உருவாக்குதல் முதலான எதிர்கால இலக்குகள் அனைத்தும் வெற்றி பெறவும், அதற்கு ஆலோசனைகள் வழங்கிய எமது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட மத்திய மாகாண மற்றும் நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர்கள், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# போலிஸ் அத்தியட்சகராக எம்.டி.டி.நிலன்க உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்பு





**(க.ருத்திரன்)**

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திற்கான புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகராக எம்.டி.டி.நிலன்க உத்தியோக பூர்வமாக சமய அனுஸ்டானங்களுடன் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்குடா வீதி பேத்தாழையில் அமைந்துள்ள உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் மதகுருமார்களின் ஆசீர்வாத சமய நிகழ்வுகள் இடம்பெற்றன ஏற்கனவே இங்கு உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய பீ.எம்.ஜெயசுந்தர இடமாற்றம் பெற்று நுவரெலியா பகுதிக்கு சென்றதனால் குறித்த இடத்திற்கு பேலியாகொடா பிரதேசத்தில் கடமையாற்றியவர் வாழைச்சேனைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

வாகரை, வாழைச்சேனை, கல்குடா உள்ளிட்ட இடங்கள் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நிர்வகா பிரதேசமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாக்களித்த சிங்கள மக்களே....

**யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**எதிர்க்கட்சிகள் ஏன் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என நீங்கள் கேட்கலாம். அதற்கு நாங்கள் கூறும் பதில் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தை சிங்கள மக்களே 'உங்களது ஆட்சி போதும் வீட்டுக்குப் செல்லுங்கள்' என்று கூறும் நிலைதான் தற்போது உருவாகி உள்ளது.**

**எனவே சிங்கள மக்களே இன்றைய ராஜபக்ச அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முயற்சிக்கும் போது எதிரணியினராகிய நாம் தற்போது அவசரப்பட வேண்டிய தேவையில்லை என்றார்.**

**இந்திய மீன்பிடிப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கும் போது, கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்ததிலும் சதி உள்ளதோ தெரியாது**

**இரு தமிழர் தரப்புகளும் மோதி விரோத மனத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் டக்லஸ் தேவானந்தாவை நியமித்தார்களோ தெரியாது.**

**எங்கு எந்தப் பிரச்சனை வந்தாலும் குரல் கொடுப்பேன். வடக்கு மீனவர்கள் பிரச்சனை என்பது பெரும் பிரச்சனை அவர்கள் ஏற்கனவே துன்பத்தை சந்தித்தவர்கள். யுத்தத்தை நாம் விரும்பவில்லை யுத்தத்தை செய்தவர்களிடம் தர்க்க ரீதியிலான கருத்து இருந்தது. வடக்கு மீனவர்களின் பிரச்சனைக்கு உள்ள தடையை அகற்ற வேண்டும்.**

**இந்திய மீனவர்கள் 30 வருடகாலமாக இலங்கை கடல்வளத்தை பயன்படுத்துகின்றனர். இதனால் இந்தியாவில் தற்போது இலங்கை வளத்தை பயன்படுத்திய ஓர் தலைமுறையே உருவாகி விட்டது. இந்தியாவில்கூட மாநிலம் மாறி வேறு மாநிலத்தில் மீன்பிடிக்க முடியாத நிலையில் இலங்கை எல்லைக்குள் வருவது பிரச்சினைக்குரிய விடயம்.**

**இதனை வெறும் மீனவர்கள் பிரச்சனையாக மட்டும் அல்ல தமிழர்களின் பிரச்சனையாக பார்க்க வேண்டும் என அரசியல் தலைவர்களை கோர விரும்புகின்றேன் என்றார்.**






# 2013 முதல் முஸ்லிம்களுக்கு எதிராக....

**அரசாங்கக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

**எரியும் வீடுகள் முதல் எரியும் உடல்கள் வரை இலங்கையில் முஸ்லிம் துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் வன்முறை, சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மத்தியில் 2013 முதல் இலங்கையில் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வின் வளர்ச்சியைக் கண்டறிந்துள்ளது.**

**இந்த பாகுபாடு, தண்டனையின்றி தொடர்ச்சியான கும்பல் தாக்குதல்களிலிருந்து, முஸ்லிம்களுக்கு எதிராக வெளிப்படையாக பாகுபாடு காட்டும் அரசாங்கக் கொள்கைகளாக உருவானது.**

**இதில் கொவிட் 19 இதனால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை கட்டாயமாக தகனம் செய்வது மற்றும் நிகாப் மற்றும் மதரசாக்கள் இரண்டையும் தடை செய்தல் போன்ற திட்டங்களும் உள்ளடங்கும்.**

**இலங்கையில் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு ஒன்றும் புதிதல்ல என்றாலும், சமீபத்திய ஆண்டுகளில் நிலைமை கடுமையாக பின்னடைவை சந்தித்துள்ளது.**

**இலங்கை அதிகாரிகள் இந்த ஆபத்தான போக்கை கைவிட்டு, முஸ்லிம்களை மேலும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பது, குற்றவாளிகளை பொறுப்பேற்கச் செய்வது மற்றும் முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து, துன்புறுத்துதல் மற்றும் பாகுபாடு காட்டுவதற்கான அரசாங்கக் கொள்கைகளின் பயன்பாட்டை நிறுத்த வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்பு சபை அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.**


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# கொரோனா கட்டுப்பாட்டு பொருட்கள் கையளிப்பு



(நூருல் ஹுதா உமர்)

மத்திய அரசின் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி (தொற்றா நோய்) தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பர் தலைமையிலான வைத்தியசாலை கொரோனா தடுப்பு செயலணியினரால் நாட்டில் கடுமையாக உச்சம் தொட்டிருக்கும் கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் அம்பாறை மாவட்டம் தழுவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பரினால் ஆர்மி தினத்தை முன்னிட்டு 241 வது படையணியினருக்கு சுவதாரணி ஆயுர்வேத பான பக்கட்டுக்களும் நீர் சூடாக்கும் இயந்திரமும் வழங்கி வைக்கப்பட்டது. அது மாத்திரமின்றி தொடர்ந்தும் அம்பாறை, தீகவாவி, போன்ற பிரதேசங்களுக்கும் அரச காரியாலயங்கள், பாதுகாப்பு படையினர், பொலிஸார், தனிமைப்படுத்தப்பட்டோர், ஊடகவியலாளர்கள், மீனவர்கள் என பல்வேறு தரப்பினர்களுக்குமாக இதுவரை ஏறத்தாழ 85 ஆயிரம் சுவதாரணி ஆயுர்வேத பான பக்கட்டுக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்போது நாட்டை ஆட்கொண்டிருக்கும் மூன்றாம் அலையில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுவதாரணி ஆயுர்வேத பான பக்கட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

இது மாத்திரமின்றி கொரோனா தொற்று தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் மத்திய அரசின் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி (தொற்றா நோய்) தேசிய வைத்தியசாலையின் ஏற்பாட்டில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு உளர்ச்சார்பு பரீட்சை 30 ஆம் திகதி

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-டி தரத்திற்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமா தாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் உளர்ச்சார்பு பாடத்தின் பரீட்சை எதிர்வரும் 30ம் திகதி நடைபெறவுள்ளதாக, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.வை. சலீம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக உளர்ச்சார்பு பாடத்தின் மீள் பரீட்சை கலவரையரையன்றி பிற்போடப்பட்டிருந்தது. தற்போது இப்பரீட்சையை நடத்துவதற்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பரீட்சாத்திகள் பரீட்சை அனுமதி அட்டைகள் இம்மாதம் 27ம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவில்லையாயின் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 026-2220092 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# போராட்டத்தை திசை திருப்புவோருக்கு உடந்தையாக வேண்டாம்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான்)

போராட்டத்தினை திசைதிருப்ப எத்தனிக்கும் தரப்பினருக்கு உடந்தையாக இருப்பதிலிருந்து விலகி இருக்குமாறு அதிபர்களுக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிபர்-ஆசிரியர் கூட்டிணைந்த தொழிற் சங்கங்களின் சமகால முன்னெடுப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடு தொடர்பில் தீர்க்கமான கட்டம் ஒன்றை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். இதனை எப்படியாவது குழப்பி போராட்டத்தைத் திசை திருப்புவதற்கான அஜந்தாக்கள் திரைமறைவிலும் ஏவிவிடப்பட்ட தரகர்கள் ஊடகவும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் நாம் மிகவும் நிதனமான முன்னேற்பாடுகளை நோக்கியும் நகர வேண்டியுள்ளது.

எமது ஒன்றிணைந்த இலக்கினை நாம் அடைந்து கொள்ள வேண்டுமாயின் அதிபர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். அதிபர் தொழிற்சங்கங்கள் மற்றும் வலய மட்டங்களிலுள்ள அதிபர் கூட்டமைப்புக்கள் சம்பள முரண்பாடுகளை தீர்க்காமல் பாடசாலைகளை திறப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ள நிலையில் சிலர் தங்கள் மேதாவித்தனங்களுக்கான எத்தனங்களை நோக்கி நகர்வதாக அறியக் கிடைக்கிறது. அதிபர் ஆசிரியர் சமூக நிலை ஏற்பட வழிவகுக்கவில்லையாயின் மகிழ்ச்சியான கற்பித்தல் இலக்கை அடைந்து கொள்ள முடியாது என்பதனை குறித்த அதிபர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த பல மாதங்களாக மாணவர்களின் கல்வி பாதிககப்படடுள்ளது. இதனை மீளமைக்க ஆசிரியர்கள் தயாராக உள்ளனர். ஆசிரியர்களின் உணர்வினைப் புரிந்து பாடசாலை ஆரம்பமாவதற்கு முன் சம்பள முரண்பாட்டுக்கான எதிர் பார்க்கும் தீர்வினை முன்மொழியுமாறே நாம் கேட்கின்றோம்

கைது செய்வோம், மாற்று நடவடிக்கை எடுப்போம் என்றெல்லாம் பயமுறுத்துவதனூடாக ஒரு ஜனநாயகப் போராட்டத்தை நசுக்க எவருக்கு உரிமை கிடையாது. தொழிற்சங்க செயற்பாட்டுகளுக்கான சட்ட திட்ட ஏற்பாடுகளுக்கு எதிராக எவராலும் அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாது. அவ்வாறான சூழ்நிலை ஏற்படுமானால் மாற்று வழிமுறைகளில் போராட்ட வடிவங்களை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

கற்பித்தலென்பது ஆசிரியர்களின் உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது அதனை முழு மனதுடன் நிறைவேற்றுவதனூடாக இலக்குகளை அடைவதற்கான விளைவுகளைப் பெறலாம். பயமுறுத்துவதனூடாகவோ விருப்பமற்ற மனநிலையினூடாக எதனை அடைந்து கொள்ள முடியாது

இருநூறு மாணவர்களுக்கு உட்பட்ட தொகையினை உடைய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் அதிபர் ஆசிரியர் பிரச்சினைக்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு அறிவிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் பாடசாலைகளை ஆரம்பிகாக எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்காது. இடைக்காலக் கொடுப்பனவு விடயத்தில் பாடம் புகடடியது போல ஆசிரியர்கள் தங்கள் இருப்பை நிரூபித்துக் காட்டுவர். அதிபர் ஆசிரியர்கள் இதற்கென தம்மைத் தயார்படுத்தியுள்ளனர்.

கல்வியமைச்சின் செயலாளருக்கு முறையான அறிவிப்பு விடப்பட்டே போராட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சேவையை பாராட்டி நிந்தவூரில் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)






கொவிட் 19 கொரோணா தொற்று பரவல் நிலைமையை கட்டுப்படுத்தும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ ஆர் எம் தௌபீக் அவர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூரில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பினால் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வு நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ ஆர் எம் தௌபீக் அவர்களின் மகத்தான சேவையை மதித்து பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி, செயலாளர் ஏ புஹாது ஆகியோர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ் புவனேந்திரன், நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம் சரிப்தீன், முன்னாள் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் எஸ் அஹமது உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கின்னியாவில் 4 விவசாய சம்மேளனங்கள் பெரும் போக நெற்செய்கையை புறக்கணிக்க முடிவு



(இஃஜாஸ்-ஏ-பரீட்)



கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள நான்கு விவசாய சம்மேளனங்கள் இம்முறை பெரும் போக நெற் பயிர்ச் செய்கையை புறக்கணிக்க முடிவு செய்துள்ளனர்.

இவர்களுக்கு இரசாயனப் பசலை மற்றும் கிருமிநாசினிகளை தரும் பட்சத்திலேயே விவசாயத்தை மேற்கொள்ள உள்ளதாகவும் இச் சம்மேளனத்தின் தலைவர்களா மற்றும் உறுப்பினராகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் வன்னியனார் மடு, ஆயிலியடி, பக்கிரான் வெட்டை, புளியடிகுடா, ஆகிய விவசாய சம்மேளன பகுதியில் சுமார் 2300 ஏக்கர் வயல் நிலங்கள் இவ்வாறு செய்கை பண்ணப் படாமல் புறந்தள்ளப்பட்டு காணப்படுகின்றன .

இங்கு விவசாய நிலங்கள் பற்றைக் காடுகளாகவும், மாடுகள் மேய்ந்து வருவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளன.

கடந்த காலங்களிலும் விவசாயத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக நஷ்ட ஈடு பெறாத நிலையிலும், தற்போது சேதனப் பசளையை பயன்படுத்தி செய்கை பண்ணி விளைச்ஙளை காண முடியுமா என அங்கலாய்க்கின்றனர் .

இதுபற்றி இவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில் விவசாயத்தை சேதனப் பசளை மூலம் செய்கை பண்ணச் சொல்லி விவசாய அமைச்சர் கோரிக்கை விடுக்கின்றனர் நஷ்டம் ஏற்பட்டால் நிவாரணம் வழங்கு வதாக கூறுகின்றார்.

கடந்த காலங்களில் பெரும் போகத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட நிலையில் எந்த நஷ்டம் இடம் பெறாத நிலையில் எவ்வாறு இவரின் வார்த்தையை நம்புவது எனவும் இவர்கள் கேள்வி எழுப்புகின்றனர் .

எனவே எங்களுக்கு இரசாயன பசளை மற்றும் கிருமி நாசினிகள் தரும் பட்சத்திலேயே நாங்கள் விதைப்பு நடவடிக்கையை ஆரம்பிப்போம் எனவும் இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

# திருகோணமலை யுனைடெட் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

பாரதி விளையாட்டு கழக அணிக்கு எதிரான போட்டியில் யுனைடெட் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது

இப்போட்டி பாரதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது

நாணயசுழட்சியில் வெற்றிபெற்ற பாரதி விளையாட்டு கழக அணி முதலில் துடுப்பாட தீர்மானித்து டிலான் 32 பந்துகளில் 35 ஒட்டம்களை பெற்றதுடன் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார் நேசன் 27 பந்துகளில் 15 ஒட்டங்களை பெற்று 34 ஓவர்களில் அனைத்து விக்கட்டுகளையும் இழந்த பாரதி விளையாட்டு கழக அணி 133 ஒட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

134 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பாட்டத்தில் களமிறங்கிய யுனைடெட் கிங்ஸ் அணி 23 ஓவர்களில் 5 விக்கட்டுகளை மாத்திரம் இழந்து 134 ஒட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். பாயாஸ் அமான் 6 விக்கட்டுகளை கைப்பற்றி 27 பந்துகளில் 28 ஒட்டங்களை பெற்று போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யட்டதுடன் மொஹமட் இஸாம் 2 விக்கட்டுகளையும் கைப்பற்றியிருந்தார் அஸ்பாக் அபூ ஆட்டமிழக்காமல் 28 பந்துகளுக்கு 35 ஒட்டுக்களை பெற்று 5 விக்கட்டுகளால் பாரதி விளையாட்டு கழக அணியை வெற்றி கொண்டது திருகோணமலை யுனைடெட் கிங்ஸ் அணி.

# திருமலையில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு சிரமதான நிகழ்வு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு சிரமதான நிகழ்வு ஒன்று ஏற்றப்பட்டு செய்யப்பட்டிருந்தது


இந்நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது

மாவட்டத்திலிருந்து டெங்கு ஒழிப்பினை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் ஆர்.ஏ.டீ.எஸ்.டீ.ரத்நாயக்க அவர்களின் தலைமையில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் இணைந்து இவ் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு சிரமதான நிகழ்வினை ஏற்ப்பாட்டு செய்திருந்தது

இந்நிகழ்வில் உப்புவெளி பிரதேசசபைக்குற்றப்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்காணிக்கப்பட்டதுடன் டெங்கு நோய் பரவும் விதம் தொடர்பிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் வழங்கப்பட்டது

இதன் பொது அப்பிரதேசத்தில் விசேட சிரமதான நிகழ்வும் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை, பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உறுப்பினர்கள் மற்றும் கிராம மட்ட குழுக்களும் இவ் டெங்கு ஒழிப்பு சிரமதான வேளை திட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# பயணம்



சில வாசனைகள் எமது வாழ்வின் கடந்த காலங்களையும் அந்த காலங்களின் வழியோடி ஏதோ சில நினைவுகளையும் கண் முன்னே காட்சியாய் கொண்டுவந்து நிறுத்துமல்லவா? அதனைத்தான் ஆங்கிலத்தில் ழேளவயடபயை என சொல்லுவார்கள். மரநிழலின் கீழே சருகுகளாய் உதிர்ந்து போய் இருக்கும் இலைகள் காற்றில் அள்ளுண்டு போகையில் காற்றோடு சேர்ந்து மணக்கும் சருகுகளிலும், மழை நீர் மண்ணைத் தொட, மழை தன்னைத் தொட்ட வெட்கத்தில் தன் ஸ்பரிசத்தை வீசும் மண்ணின் வாசத்திலும், கடல் அலையின் கரையோடு கால்களை நனைத்துக் கொண்டு தனிமையில் நடக்கையில் தூரத்திலிருந்து வீசும் காரம் சுண்டல் வாசம், எம்மை கடந்து செல்லுவோர் சிலர் போட்டிருக்கும் வாசனைப் பொருட்களின் பரிமளமும், அந்தி மாலைப் பொழுது வாசலிலுள்ள மல்லிகைப் பந்தலிலுள் உள்ள மொட்டுக்கள் மெல்லமாய் மலரும் போது பரவும் மல்லிகை வாசம், மதிய நேரம் உச்சி வெயிலில் வெதுப்பகத்தினை கடக்கும் போது வரும் பாணின் வாசம் என்பனவெல்லாம் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட ஞாபகங்களை தந்திருக்கும். எனக்கு மட்டும் விதிவிலக்கல்ல.

திட்டமிட்ட ஒரு பயணத்தின், என் நண்பியின் மோட்டார் வண்டியினது பின் இருக்கைகளை நான் நிரப்பியிருக்க, நீண்ட தூரங்களை கடந்து செல்கிறது வண்டி. வண்டியின் சில்லுகள். வண்ண வண்ணமாய் தொங்கவிடப்பட்டிருந்த துணிக்கடைகள், கண்ணாடிக்குள் அடைபட்டிருந்த வடையும், சமோசாவும் என காட்சிதந்த சாப்பாட்டுக் கடைகள், இடையிடையே பச்சை பூத்திருந்த வயல்வெளிகள் எல்லாம் நாம் செல்லும் திசைக்கு எதிரே என்னை வெகுவாய்;க் கடந்து செல்ல, பயணிகளை நிரப்பவென முந்தியடித்து எம் வண்டிச் சில்லுக்கு அருகே வந்த அரச பேரூந்களும், தனியார் பேரூந்துகளும், எம்மை அச்சப்படுத்தவே செய்தன. சில நிமிட ஓட்டத்தின் பின்னர் , பயணத்தின் இலக்கை விரைவாய் அடைந்துவிடலாம் என, நண்பி வண்டியின் திசைப் போக்கை மாற்றினாள்.

வீதியின் இரு கரையும் பனை மரங்களை வரிசைக்கு அடுக்கி விட்டது போல் நிரம்பியிருந்தன. மிதமான மெல்லிய காற்றில் அசைந்தாடிய அந்த பனையோலைகளின் சர சர என்ற சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்க, பனை மரங்களைக் கடந்து சில வீடுகளின் எல்லையை பனை ஓலைகளே மூடியிருந்தமையைக் கண்டு, இன்னனும் பனையோலை வேலிகள் உயிர்ப்போடு இருப்பதை உணர்ந்தேன்.

அந்த வேலிகளில் பழுத்து போய் மஞ்சள் நிறத்திலிருந்த பனை ஓலைகள், கதியால்களோடு இறுக்கிக் கட்டப்பட்ட கயிற்றின் முடிச்சுக்களில் சிதைவுண்டு, சருகாய் போன ஓலையின் கதை சொல்லுவது போன்று வீசிய பனையோலை வாசம். அதுவல்லவோ கிராமத்து வாசம் என அறிந்த எனக்கு, அந்த வாசம் ஏதோ ஒரு அழகிய கிராமத்தினை என் நினைவில் நிறுத்தியது.

ஊரின் முகப்பில் ஒரு அழகிய சிறிய கோவில். கோவிலுக்கு முன்னால் சில பனைமரக்குற்றிகளினை சரித்து , அணை போல் கட்டி அதற்குள் கடற்கரையில் இருக்கும் வெள்ளை மணலைக் கொண்டு நிரப்பி இருந்தார்கள். மாலை வேளையில் வீட்டின் வேலைகளை எல்லாம் முடித்து விட்டு, அந்த பனங்குற்றிகளில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்த ஆச்சிகள், உணா மரத்தின் தடியினை வெட்டிச் சீவி, அதனை வைத்து கிட்டிப்புல் விளையாடிக் கொண்டிருந்த சின்ன பிள்ளைகள், வீட்டு வேலியின் கதவோடு நின்று கதைபேசிய அம்மாக்கள் என மனிதர்களால் மட்டுமே நிறைந்து இருந்தது அந்தக் கிராமம்.

திரும்பிய இடமெல்லாம் சின்ன சின்ன ஓலைக் குடிசைகள். வீட்டு வேலிகளுக்கு முன்னால் பனங்குற்றிகளும் , விறகுகளும், தேங்காய் பொச்சுகளும் வெயிலுக்காய் வேண்டி இடம் பிடித்திருந்தன. தொடர்;ச்சியாய் வேரோடிய பனையோலை வேலிகளின் இடையிடையே கறையான்களின் சித்திர வேலைகளினால் ஓலைகள் முழுவதுமாய் சிதைவுண்டு வீட்டின் கூரையை காட்டிக்கொண்டிருந்தது. அந்த கூரையினைக் காட்டும் வீட்டினை தேடி கால்கள் திசை மாறின.

அந்த கூரை வீட்டின் வாசலில் கால்கள் தறித்து நின்றன. பனையோலைகளோடு பலமாய் பந்தம் கொண்டாடிய பூவரசு, முள்முருங்கை மரங்கள், அவை கிளைவிட்டிருந்த சிறிய கொப்புக்களில் எல்லாம் கரிப்பிடித்த சட்டிகளும் பனைகளும் கவிழ்க்கப்பட்டு இருக்க அவைக்கு ஈடாக வெளுத்துப் போன சில நூல் புடவைகளும் , சட்டைகளும், சாரங்களுமாய் வேலியை அலங்கரித்திருந்தன. கண்கள் வேலிகளின் கந்தல் துணிகளிலிருந்து விலகவில்லை. ஆனால் காதுகளுக்குள் ஏதோ சத்தம் நுழைந்தது.

விடடி என ஒரு மெல்லிய ஆண் குரலும், விடமாட்டன் போடா என மென்மையான பெண்குரலும் கேட்கின்றது. அக் குரல்களுக்கு காதுகொடுத்து திரும்பி பார்த்தேன். குடிசைக்கு அருகிலிருந்த தேமா மரம் வெள்ளைப் பூக்களால்; நிரம்பியிருந்தது. மரம் கிளை பரப்பி நிழல் தந்திருந்த மணலில் வாடிப் போய் சருகான பூக்களும், இப்பொழுதுதான் உதி;ர்ந்தது போல சில வெள்ளைப் பூக்களும் மரத்தின் கீழ் பரவியிருந்தன. தேமாவின் ஒரு பெரிய கொப்பிலிருந்து பழைய சேலை தொங்குகியதைக் கண்டு, சேலை நுனியின் அடிவரை ஒரு நோட்டம் போனது எனது கண்கள. கண்களின் நோட்டத்தில் அது ஒரு அழகிய ஏணை என்பதை அறிந்தேன்.; மேனியில் புழுதியோடு வெளுத்துப் போன நீல நிறக் காற்சட்டை மட்டும் போட்டிருந்த சிறுவனும், மண் நிறமும் அவள் நிறமும் ஒன்று என்பது போல ஒரு சட்டை, அவளிலும் பார்க்க சட்டை கொஞ்சம் ஏற்றம் போலும், அவள் முழங்காலைக் காட்டிக் கொண்டிருந்தது. தலையில் எண்ணெய் வைத்து, அது அவள் நெற்ற்ணீ வரை வழிந்தோட ஏணையின் இன்னொரு பக்கத்தில் நின்று ஏணையை இழுத்து தன் பக்கம் வைத்திருந்தாள் அவள். அந்த மரத்து ஊஞ்சலுக்காய் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த அவர்களை பார்த்து அழகிய நினைவுகள் என சிரித்துக் கொண்டே வீட்டின் உள்ளே ஒருமுறையாவது போக என் கால்கள் எத்தணித்தது.

கூரையின் வாசலுக்கான கால்களின் பயணத்தில் , ஒரு சிறிய தென்னம் பி;ள்ளையைச் சுற்றி; மணல் கிண்டப்பட்டு அமைந்திருந்த தென்னம் பாத்தி, பானைகளும், சட்டிகளுமாய் அந்த பாத்திக்குள்ளே சிதறிக் கிடக்க, ஓரிரண்டு மண்சட்டிகளும,; சாம்பலும் கரியுமாய் இருந்த கோப்பை, செப்பு நிறத்திலான குடம் ஒன்றும் என தென்னம் பாத்தியை நிரப்பியிருக்க, அருகே பனைமரத்தின் வடலிகள் பெரியதும் சிறியதுமாய் துளிர்விட்டிருந்தமை கண்களுக்கு விருந்தாய் அமைந்தன. . அப்படியே எல்லாவற்றையும் வியப்புடனும், இரசணையுடனும் பார்த்துக் கொண்டே, குடிசையின் வாசல் வரையில் கால்கள் நடந்தன.

குடிசையின் வாசலைத் தொட்ட பெருமிதம் எனது கால்களுக்கு. உள்ளே செங்கல் ஒட்டுக்களில் மண்ணெண்ணெய் விளக்குகளும்;, அதாவது கைவிளக்குகள் என நினைக்கின்றேன். சாராயப் போத்தலின் மூடியில் துளையிட்டு அதற்கிடையில் பழைய துணியை திரியாக்கி போத்தலில் எண்ணெய் ஊற்றி அதனை விளக்காக பயன்படுத்துவார்கள். சில வீடுகளில் எண்ணெய் வாங்குவதற்கு கூட இயலாத நிலமை. அவர்கள் நீரும் , எண்ணெயும் கலக்காது என்ற அறிவை தமது வறுமைக்கு பயன்படுத்தி இருப்பார்கள். எப்படியெனில் அதே போத்தலில் தண்ணீரை அரைவாசிக்கும், எண்ணெயினை அரைவாசிக்கும் விடுவார்கள். போத்தலின் அடியில் தண்ணீரும், மேலே நீல நிற மண்ணெண்ணெயுமாய் எரியும் விளக்குளில், மேலேயுளள்ள எண்ணெய் தண்ணீரின் எல்லையைப் பிடிக்கும் வரையில் தான் குடிசைகளுக்கு வெளிச்சம்.

பழைய புகைப்படங்கள், சீப்பு, கண்ணாடி, கத்தி, சுவாமிப் படங்கள் என ஒவ்வொன்றும் ஓலைகளின் இடுக்குகளுக்கு இடையில் செருகப்பட்டிருக்க, சுவாமிப்படம் செருகப்பட்டிருந்த இடுக்கிற்கு நேராக , அந்த செங்கல் சுவர் ஒட்டில் ஒரு சிறிய கிண்ணத்தில் திருநீரும் நிரம்பியிருந்தது. குடிசையின் மூலைகளில் ஓலைப்பாய்களை என் கண்கள் கண்டதையும் மறுப்பதற்கில்லை. குடிசையின் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டிருக்க, மெல்லமாய் என் மூக்கு அடைப்பது போலிருந்தது.

என் மூச்சு கொஞ்சம் தடைப்படுகிறது. ஏதோ புகைத்துக் கொண்டே இருப்பதையுணர்ந்து, திரும்பி பார்க்கிறேன். வெள்ளை வெள்ளையாய் புகை கிளம்பிக் கொண்டிருக்கின்றது. எனது கை வீசும் காற்றினுள் அவை அ;;;;டங்கிவிடும் என நினைத்து, கைகளால் புடியினை வீசிக் கொண்டே, புகைக்கும் இடத்தினை பார்த்தேன். கொஞ்சம் கொஞ்சம் தணிந்த புகைக்குள், அடுப்பினுள் நெருப்பு இருப்பது தெரிகிறது. இரண்டு அடுப்புக்கள் நெருப்பின் மேல் கேற்றல். சாணத்தினால் மெழுகியுள்ள அடுப்படி. பக்கத்தில் பன்னாடைகள், பனம்மட்டைகள், ஊமல்கள் என அடுப்படியை அலங்கரித்திருக்க, பனம் ஓலைகள் எரிந்த புகையில் கிளம்பிய தூசுகளினுள் படிந்தபடியே ஒரு இரும்பு புணல். அருகே சுவரின் ஓரத்தில் சாய்க்கப்பட்டிருந்த புட்டுப்பானை, நீத்துப்பெட்டி , சுளகு, தட்டுப்பெட்டி என்பவவெல்லாம் ஓரமாய் தெரிய புகையின் நடுவில் எரியும் நெருப்பு, நெருப்பின் மேலே கவிபாடும் கேற்றில் என முழுத் தோற்றமாய் அதை ரசித்தபடி நின்றேன்.

மீண்டும் மூச்சு கொஞ்சம் அடைக்கிறது. இந்த கனவுக் குடிசை , தேமா ஊஞ்சல், பனை வேலிகள், கதை பேசும் ஆச்சிகள், விளையாடும் பிள்ளைகள், பனையோலை வாசம் எல்லாம் நினைவிழந்து போகிறது. திடீரென வீதியெங்கும் கட்டிடங்களாய் தெரிகின்றது. அப்பொழுது தான் உணர்ந்தேன், நண்பியோடு எனது இருக்கை இப்பொழுது கடந்து கொண்டிருப்பது வாய்க்கால்கள் நிரம்பிய சாக்கடை வீதிகளை என்று.



**சுவன்யா ஸ்ரீதர்**
ஊடகக் கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்







நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT




# சம்மாந்துறை வலயத்தில் 39 பாடசாலைகள் 21 ஆம் திகதி திறக்கப்படும்



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் 39பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதிதிறக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அதிபர்களுக்கும் தொழினுட்பமூலம் சகலஅறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.கல்வி அதிகாரிகளாகிய உங்களுக்கு முக்கிய கடமைஇருக்கிறது. அன்று காலை 9.30மணிக்கு முன் பாடசாலைக்கு வருகைதந்த அதிபர் ஆசிரியர் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவரது வரவுஅறிக்கை அனுப்பப்படல்வேண்டும்.

இவ்வாறு சம்மாந்துறை வலயக்கல்விப்பணிமனையின் பிரதிகக்ல்விப்பணிப்பாளர் எ.எல்.அப்துல் மஜீட் நேற்று (18) திங்கட்கிழமை பணிமனையில் நடைபெற்ற கல்விசார் உத்தியோகத்தர் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

குறித்த கூட்டம் நேற்று (18)வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல்நஜீமின் வழிகாட்டலில், பிரதிவலயக்கல்விப்பணிப்பாளரான எஸ்.எம்.எம்.அமீர் தலைமையில் நடைபெற்றது. பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான எ.நசீர் ,யு.எல். றியாழ் ஆகியோரும் மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினர்.

கொவிட்தடுப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பதாதைகள்துண்டுப்பிரசுரங்கள் செய்திக்குறிப்புகள்அனைத்தும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் 28ஆம் திகதிகளில் பாடசாலைச்சூழலில் பாடசாலைதிறப்பது தொடர்பாக ஒலிபெருக்கிமூலம் பொதுஅறிவிப்பு செய்யவேண்டும். இதனை கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள் பொறுப்பேற்கவேண்டும்.

முதலிருவாரங்களில் மாணவர்களுக்கு கற்பித்தலில் அழுத்தம் பிரயோகிக்கப்படக்கூடாது. மாறாக அவர்கள் சுயாதீனமாக சுதந்திரமாக இயல்புநிலைக்கு திரும்புவதற்கேற்றவிதமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.கற்பித்தல் என்று பெரிதாக எதுவும் இடம்பெறாதவகையில் ஏனைய புறக்கிருத்தியசெயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர் அனுமதிக்கப்படுவர்.

தடுப்பூசி போடாத எந்தஆசிரியரும் வகுப்பறைக்குள் நுழையமுடியாது. அதைவிட தடுப்பூசி போடப்படாத பெற்றோர் கல்விசாரா ஊழியர்கள் யாரும் பாடசாலைக்குள் நுழைய அனுமதிக்கப்படக்கூடாது.

ஆசிரியர்கள் தொழிற்சங்கப்போராட்டம் என்று ஏதாவது சமுகமளிப்பின்மை இடம்பெற்றால் அதனை எதிர்கொள்ளுமுகமாக பிரதேசசெயலகங்களிலுள்ள அபிவிருத்திஉத்தியோகத்தர்களின் சேவையை பெறுவது தொடர்பாகவும் ஆளுநர் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

## திராய்க்கேணியில் உலருணவு நிவாரணம்



(வி.ரி.சகாதேவராஜா)

அட்டாளைச்சேனை பிரதேசசெயலத்திற்குட்பட்ட திராய்க்கேணி கிராம மக்களுக்கு ஒருதொகுதி உலருணவு நிவாரணம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.


கிழக்கின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இதனை வழங்கிவைத்தார்.

கொரோனாத் தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்த ஒருதொகுதி அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1மில்லியன் ருபா (10லட்சருபா) செலவில் உலருணவு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

கனடா நாட்டிலுள்ள 'ரு டீப்' நிறுவனம் இதற்கான நிதிஅனுசரணையை கிழக்கின் பிரபல சமுக செயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினூடாக வழங்கியுள்ளது.

முன்னதாக திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மண்டானை மற்றும் கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராம மக்களுக்கு ஏலவே உலருணவு நிவாரணம் வழங்கும் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## ஓட்டமாவடி எல்லை வீதியில் ஏற்பட்டுள்ள ஆபத்தான குழியை புனர்நிர்மாணம் செய்து தருமாறு கோரிக்கை



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட எல்லை வீதியில் ஏற்பட்டுள்ள ஆபத்தான குழியை புனர்நிர்மாணம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியின் நடுவே செல்லும் வடிகான் இடிந்த நிலையில் சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக புனர்நிர்மாணம் செய்யப்படாமல் காணப்படுகிறன. இவ் வீதியால் வரும் நபர்கள் குறித்த குழியில் விழுந்து செல்கின்றனர்.

இரண்டு வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் குறித்த வீதியில் ஏற்பட்டுள்ள குழியை புனர்நிர்மாணம் செய்து பயணிகளை விபத்திலிருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

அத்தோடு, எதிர்வரும் காலம் மழைகாலம் என்பதால் குறித்த குழியில் மழை நீர் தேங்கி நின்று டெங்கு பெருகும் அபாயம் ஏற்படக் கூடும் என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## சாலை முகாமையாளரை மாற்றக் கோரி இ.போ.ச மட்டக்களப்பு சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(துதிமோகன்)

இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலையின் ஊழியர்கள் இன்றைய தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர். இலங்கை போக்குவரத்து சபை மட்டக்கப்பு சாலையின் தற்காலிக முகாமையாளரின் செற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டு அவரை மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அவர்கள் இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டிருந்தனர்.

மட்டக்களப்பு சாலையின் சுவர்களில் எதிர்ப்புப் பதாதைகள் தொங்கவிடப்பட்டு ஊழியர்கள் சாலையின் வெளியே பணிக்குச் செல்லாமல் இவ்வார்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.இதன்போது மதுபோதையில் ஈடுபாடு இல்லாத மட்டக்களப்பு சாலை முகாமையாளர் தேவை, மட்டக்களப்பு சாலை உள்ளாச விடுதியாகச் செயற்பட எந்த ஊழியருக்கும் விருப்பம் இல்லை, கடந்த காலத்தில் மட்டக்களப்பு சாலையைச் சீரழித்த தற்காலிக சாலை முகாமையாளர் எங்களுக்குத் தேவையில்லை போன்ற வாசகங்கள் தொங்கவிடப்பட்டும், கையில் ஏந்தியவாறும் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிரமதானப்பணி



(ஏறாவூர் நிருபர் -நாஸர்)

கல்வியமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக எதிர்வரும் 21 ஆந்திகதி பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் தேசிய தொண்டர் தினமான நேற்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கிணங்க பிரதேச செயலகப்பிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடசாலையில் சிரமதானப்பணி மற்றும் மரக்கன்றுகள் நடுகையும் நடைபெற்றன.

பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.டபிளியு.இர்ஸாத் அலியின் வழிகாட்டலிடாக்டர் அஹமட் பரீட் வித்தியாலய வளாகம் சிரமதானப்பணிமூலம் சுத்தம் செய்யப்பட்டது.

பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தலைவர் ஜேஎம். அஸீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப்பணிமனையின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்ஜே. றிப்கா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## கலைஞர்களுக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள்



(வாஸ் கூஞ்ஞ)

கொரோனா பேரிடர் காலத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய கலைஞர்களுக்கு நீலண் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்திலிருந்து ஸ்வஸ்திக் நுண்கலைக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உதவி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐம்பது கலைஞர்களுக்கு இவ் உதவி வழங்கப்பட்டது.

இவ் உதவித்திட்டத்தில் ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

திங்கள் கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஸ்வஸ்திக் நுண்கலைக் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில்; மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் கலந்துகொண்டு இவ் உதவிப்பொருட்களைவழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மன்னார் மாவட்ட செயலக பிரதம கலாச்சார உத்தியோகத்தர் நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எம்.குணபாலன், திட்டப்பணிப்பாளர் க.மகேந்திரன், இவ் நம்பிக்கை நிதியத்ததைச்; சார்ந்தவர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## இலங்கை வங்கியின் திருகோணமலை நகர டிஜிட்டல் கிளை திறந்துவைப்பு



இலங்கை வங்கியின் திருகோணமலை நகர டிஜிட்டல் கிளை நேற்று திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.பிரதான வீதியில் அமைக்கப்பட்ட இரண்டு மாடி கட்டிடத்தில் இது இயங்குகிறது.1981ம் வருடம் ஆவணி மாதம் இரண்டாம் திகதி அப்போதய நிதி அமைச்சராக இருந்த ரொனி டி மெல் அவர்களால் 624வது கிளையாக இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது முகாமையாளராக அண்மையில் மறைந்த ஆர்.சுப்பிரமணியம் கடமையாற்றினார்.இலங்கை வங்கியின் தலைவர் காஞ்சனா ரத்வத்தஇலங்கை வங்கியின் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர்.கடைவீதி கிளை முகாமையாளர் ரி.விஜயபாஸ்கரின் தலலமையில் இத்திறப்பு விழா இடம்பெற்றது. (கதிரவன்)





## வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

# உங்கள் திறமைக்கு ஓர் மகுடம்

மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளத்தின் ஏற்பாட்டில்

# வாசிப்புத் திறன்கான் மற்றும் பேச்சு திறன்கான் போட்டிகள் - 2021

(10 வயது தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்டவர்கள்)

### போட்டி நிகழ்வுகள் 3பிரிவுகளில் இடம்பெறும்

**1ம் பிரிவு** - 10 வயதுக்கு உட்பட்டவர்கள், வாசிப்புத் திறன்கான் போட்டி, பேச்சு திறன்கான் போட்டி.

**2ம் பிரிவு** - 11 வயது தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, வாசிப்புத் திறன்கான் போட்டி, பேச்சு திறன்கான் போட்டி.

**3ம் பிரிவு** - 19 வயது தெடக்கம் 29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பேச்சு திறன்கான் போட்டி.

### போட்டிக்கான பொதுவான நிபந்தனைகள்

பேச்சுத் தலைப்பு, போட்டித் திகதி மற்றும் போட்டி நடைபெறும் இடம் விண்ணப்பிக்கின்ற போட்டியாளர்களுக்கு மாத்திரம் அனுப்பி வைக்கப்படும்

போட்டியில் பங்குபற்ற ஆர்வம் உள்ளவர்கள் தங்களின் பெயர், முகவரி, வயதுபிரிவு,
தேசிய அடையாள அட்டை இலக்கம், கிராமசேவகர் பிரிவு,
இளைஞர் கழகத்தின் பெயர், தொலைபேசி இலக்கம் போன்றவற்றை
**077 1857 444 என்ற இலக்கத்திற்கு வட்ஸ்அப் செய்யவும் அல்லது**
உங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை
**இளைஞர் சேவை அதிகாரி,**
**பிரதேச செயலகம்,**
**மண்முனை மேற்கு, வவுணதீவு.**
என்ற முகவரிக்கு **2021.10.23** திகதிக்கு முன்னர் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு: மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாளர்கள் உள்வாங்கப்படுவர் எனவே பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்**

மேலதிக விபரங்களுக்கு
செயலாளர்,
பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்,
மண்முனை மேற்கு, வவுணதீவு.
**+94771857444**



2021